# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

## புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழங்க லஞ்சம் வாங்கிய குற்றத்திற்காக பஞ்சாயத்து தலைவருக்கு 4 வருட சிறை தண்டனை விதித்து தீர்ப்பு

சிவகங்கை மாவட்டம் ஆலங்குடி பஞ்சாயத்தில் வசித்து வந்த திரு.கணபதி என்பவர் கடந்த 2002ம் ஆண்டு புதிய குடிநீர் இணைப்புக்காக ஆலங்குடி பஞ்சாயத்தில் விண்ணப்பித்திருந்தார். இந்த விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து புதிய குடிநீர் இணைப்பு வழங்க திருமதி. ராணி ஆரோன், பஞ்சாயத்து தலைவர், ஆலங்குடி பஞ்சாயத்து, சிவகங்கை மாவட்டம் அவர்கள் தனக்கு லஞ்சமாக ரூ.300/- யை கொடுக்குமாறு கேட்டுள்ளார். லஞ்சம் கொடுக்க விருப்பமில்லாத திரு,கணபதி அவர்கள் சிவகங்கை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவில் திருமதி. ராணி ஆரோன், பஞ்சாயத்து தலைவர் மீது புகார் மனு அளித்தார். இதன் பேரில் சிவகங்கை மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள் பொறி வைப்பு நடவடிக்கை மேற்கொண்டு திருமதி. ராணி ஆரோன், பஞ்சாயத்து தலைவர், ஆலங்குடி பஞ்சாயத்து தலைவர் அவர்களை திரு.கணபதி அவர்களிடமிருந்து லஞ்ச பணமான ரூ.300/-யை பெற்ற போது கைது செய்தனர். மேலும் இது சம்பந்தமாக வழக்கு பதிவு செய்யப்பட்டு, வழக்கானது சிவகங்கை மாவட்டம் சிறப்பு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இன்று 27.10.2022 இவ்வழக்கில் குற்றவாளி திருமதி. ராணி ஆரோன், முன்னாள் பஞ்சாயத்து தலைவர், ஆலங்குடி, சிவகங்கை மாவட்டம் அவர்கள் புகார்தாரரிடம் லஞ்சம் ரூ.300/- லஞ்சம் கேட்ட குற்றத்திற்கு 3 வருடங்கள் சாதாரண சிறை தண்டனையும் ரூ.5,000/- அபராதமும், புகார்தாரரிடமிருந்து லஞ்ச பணம் பெற்றதற்கு 4 வருடங்கள் சாதாரண சிறை தண்டனையும் ரூ.10,000/- அபராதமும் விதித்து, இந்த 4 வருடங்கள் சாதாரண சிறை தண்டனைகளை அனுபவிக்க வேண்டும் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

மேலும் வழக்கின் வாதி திரு.கணபதி என்பவர் குற்றவாளிக்கு சாதகமாக சாட்சியம் அளித்ததால் அவர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 193ன் படி நடவடிக்கை எடுக்கவும் (இந்த நடவடிக்கையானது சிறப்பு நீதிமன்றத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது) மற்றும் வழக்கின் சாட்சி திரு.ராமசாமி என்பவர் குறுக்கு விசாரணையின்போது குற்றவாளிக்கு சாதகமாக சாட்சியம் அளித்ததால் அவர் மீது இந்திய தண்டனை சட்டம் பிரிவு 195ன் படி நடவடிக்கை எடுக்கவும் நீதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார்.